


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 20.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்











# இந்திய நிகழ்வுகள்

- அரசியலமைப்புச் சட்டப்படி உள்ள சமத்துவ உரிமைக்கு எதிராக இஸ்லாமிய சமூகத்தில், உடனடியாக முத்தலாக் வழங்கி விவாகரத்து செய்யும் முறை உள்ளதாக தொடரப்பட்ட வழக்கில், உடனடி முத்தலாக்கை தண்டனைக்குரிய குற்றமாகக் கருதும் அவசர சட்டத்திற்கு, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார்.
- குறிப்பு
  - குடியரசுத்தலைவர் அவசர சட்டம் பிறப்பிப்பதற்கான அரசியலமைப்பு **விதி – 123.**
  - முத்தலாக் தொடர்பான சட்ட மசோதா மாநிலங்களவையில் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) முதல் விண்வெளி தொழில்நுட்ப அடைவு மையத்தினை **(ISRO Technology Incubation Center) திரிபுரா தலைநகர் அகர்தலாவில்** தொடங்கியுள்ளது.
  - இம்மையத்தினை திரிபுரா முதல்வர் பிப்லாப் குமார் தேவ் திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

- சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஐ.ஏ.எஸ் அதிகாரி **“அன்னா ராஜம் மல்ஹோத்ரா” Anna Malhotra** மும்பையில் செப்டம்பர் 17-ஆம் தேதி காலமானார்.
- **குறிப்பு:**
  - 1927-ல் கேரளாவின் எர்ணா குளம் மாவட்டத்தில் “அன்னா ராஜம்” பிறந்தார்.
  - **1951-ஆம் ஆண்டு ஐ.ஏ.எஸ்** அதிகாரியான அன்னா ராஜம், ராஜாஜி உட்பட 7 முதலமைச்சர்களின் கீழ் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் உத்திரப்பிரதேச மாநில முதலமைச்சர் ஆகியோர் இணைந்து 45-வது பிரவாசி பாரதிய திவாஸிற்கான **(PBD – Pravasi Bharatiya Biwas)** **www.pbindia.govt.in** என்ற இனையதளத்தை தொடங்கியுள்ளனர்.
  - 15-வது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடானது 2019-ஆம் ஆண்டு ஜனவரி 21 முதல் 23 வரை உத்திரப்பிரதேச மாநிலத்தின் வாரணாசியில் நடைபெற உள்ளது.
  - PBD (Pravasi Bharatiya Biwas) – 2019 ன் கருத்துரு: **“புதிய இந்தியாவை கட்டமைப்பதில் இந்தியப் புலம் பெயர்ந்தவர்களின் பங்கு” Role of Indian Diaspora in building a New India** என்பதாகும்.
- **குறிப்பு:**
  - பிவாஸி பாரதிய திவாஸ் (வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினம்) ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி-09-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.
  - இம்மாநாட்டில் முதன்மை அழைப்பாளராக மொரிசியஸ் நாட்டின் பிரதமர் “பிரவிந்த் குமார் ஜீக்நாத்-உடம் (Pravid kumar jugnauth), சிறப்பு அழைப்பாளராக நார்வே நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் “கிமன்சூ குலதி” (Himanshu Gulati) கலந்து கொள்ள உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக நிகழ்வுகள்

- **3வது கொரிய** நாடுகளுக்கிடையேயான மாநாடு வடகொரிய தலைநகர் பியாங்கியோங் என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது. இம்மாநாட்டில், தென் கொரிய அதிபர் **மூன் ஜே இன்** பங்கேற்றுள்ளார். சுமார் **18 ஆண்டுகளுக்குப் பிறகு** தென் கொரிய அதிபர் வடகொரியா செல்வது இதுவே முதல் முறையாகும்.
  - இம்மாநாட்டில் **2032-ம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகளை** இருநாடுகளும் இணைந்த நடத்த விண்ணப்பம் அனுப்புவதாக திட்டமிட்டுள்ளது.

- வங்காள தேசத்தில் உள்ள **"சிட்டகாங்", "மோங்லா" Chittagong and Mongla** ஆகிய துறைமுகங்களை இந்தியா வணிக ரீதியாக பயன்படுத்த அந்நாட்டுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
    - இதன் மூலம் இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள மாநிலங்களுக்கு எளிதாக சரக்குகள் பரிமாற்றம் செய்யப்படும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **மனிதர்களால் சுமந்து** செல்லக்கூடிய பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையானது மகாராஷ்டிராவின் அஹமத் நகரில் 2வது முறையாக சோதனை செய்யப்பட்டுள்ளது.
    - **MPATGM (Man Portable Anti Tank Guided Missile)** ஆனது DRDO ல் உருவாக்கப்பட்ட மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையாகும்.

We Shine Academy TM

## விருதுகள்

- **தெற்கு இரயில்வே** மண்டலத்தில் **"பசுமை கட்டிடம்"** என்ற சான்றிதழை பெற்ற முதல் இரயில் நிலையம் எனும் பெருமையினை சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தின் சிவப்பு செங்கல் கட்டமைப்பு பெற்றுள்ளது.

## நியமனங்கள்

- திறமையான கலைஞர்களையும், தொழில் முனைவோரையும் ஊக்குவிக்கும் நோக்கில் திறன் இந்தியா திட்டத்தை 2015ம் ஆண்டு ஜுலை 15ல் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.
    - திறன் இந்தியா திட்டத்தின் தூதர்களாக பாலிவுட் பிரபலங்கள்

**"வருண்"** மற்றும் **"அனுஷ்கா சர்மா"** ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

We Shine Academy™